செய்தி வெளியீடு எண் :354 நாள்: 08.03.2022

**தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும்**
**தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்**
**இணைந்து நடத்தும் பேரிடர் மேலாண்மை கருத்தரங்கம்...**

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையம் இணைந்து சென்னையில் 8.3.2022 மற்றும் 9.3.2022 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் 10 கடலோர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பேரிடர் மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கினை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

பல்வேறு மாநிலங்களின் பேரிடர் மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொள்ளும் இந்த கருத்தரங்கு மூலம், பேரிடர் மேலாண்மையில், எதிர்கொள்கிற சவால்களையும் பின்பற்றுகிற சிறந்த வழிமுறைகளையும், ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டு பயன்படுகிற வகையில் இந்த இரண்டு நாள் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கு நிகழ்வின் போது, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் செயலர் (பொறுப்பு), திரு. கமல் கிஷோர், ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் திரு. சஞ்சீவ் குமார் ஜிண்டால், இ.ஆ.ப., தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் இணைச் செயலர் (கொள்கை மற்றும் திட்டமிடல்) திரு. குனால் சத்யார்த்தி, இ.வ.ப., தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் முதன்மைச் செயலர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. மு. அ. சித்திக், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர், திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**